1866

உ

சிவமயம்.

திருப்பரங்குன்றம், சுப்பிரமணியர் பேரில்

# வழிநடை

# காவடிச்சிந்து.



இஃது

பாவாலி ஜமீன், பாவாலி மகா-ா-ா-ஸ்ரீ

க. மி. முத்துச்செல்லமாச்சாரி அவர்கள்

இயற்றியது.

ஷியூர் மகா-ா-ா-ஸ்ரீ

மா. சண்முகஞ்செட்டியாரவர்கள் குமாரர்

மகா-ா-ா-ஸ்ரீ

மா. ச. தனுஷ்கோடி செட்டியாரவர்கள்

பொருளுதவியால்

விருதுநகர், ஸ்ரீமான்

இராமலிங்கக் குருக்களவர்களது

சச்சிதானந்தம் பிரசில்

பதிப்பிக்கப்பெற்றது.

1930 [அணா 2

Q26:417
M30
149695

உ

சிவமயம்.

திருப்பரங்குன்றம், சுப்பிரமணியர் பேரில்

# வழிநடை

# காவடிச் சிந்து.



இஃது

பாவாலி ஜமீன், பாவாலி மகா-ா-ா-ஸ்ரீ

க. யி. முத்துச்செல்லமாச்சாரி அவர்கள்

இயற்றியது.

ஷியூர் மகா-ா-ா-ஸ்ரீ

மா. சண்முகஞ்செட்டியாரவர்கள் குமாரர்

மகா-ா-ா-ஸ்ரீ

மா. ச. தனுஷ்கோடி செட்டியாரவர்கள்

பொருளுதவியால்


விருதுநகர், ஸ்ரீமான்

இராமலிங்கக் குருக்களவர்களது

சச்சிதானந்தம்-பிரசிற்

பதிப்பிக்கப்பெற்றது.

விலை] 1930 [அணா 2

# சாற்றுக்கவி.

விருதுநகர் ஸ்ரீமான்,

## இராமலிங்கக் குருக்களவர்கள் இயற்றியது.

அவனியெலாம் புகழ்கின்ற பாவாலி யெனுநகரில்
அதிக மாகக்
கவனமிகு விஸ்வகுலத் துதித்தமுத்துச் செல்வமெனுங்
கவிஞர் கோமான்
குவளைமலர்க் கண்ணுளை கூட்டிவழி காட்டிநடை
கூடிப் பாடி
சிவனுமையா ளருள்குமரன் பரங்கிரிக்குச் சென்றகதை
சிந்து சொற்றான்.

சொற்றதனைக் கற்றவரு மற்றவரும் படித்துவக்கச்
சொர்ண'மீந்து
நற்றவர்வாழ் பாவாலி நகர்வசிய குலதிலகன்
நல்லோர் நேசன்
கொற்றவடி வேற்குமர னடிபரவுஞ் சண்முகமா
லென்னுங் கோமான்
பெற்றதனுஷ் கோடிவள்ளல் அச்சிலிட்டுப் புகழதிகம்
பெற்றான் மாதோ.

உ

சிவமயம்.

திருப்பரங்குன்றம்

## சுப்பிரமணியர் பேரில்

# வழிநடை காவடிச்சிந்து.

### விருத்தம்.

சீர்பெருகும் பரங்குன்றம் தன்னில் வாழும்
சிவசுப்பிர மண்யருட செயலினாலே
ஏர்பெருகும் பாவாலி நகரந் தன்னில்
ஏகமாய் மாரிபெய்து செழித்துவாழ்க
பேர்பெருகும் உலகிலுள்ள மனுக்களெல்லாம்
பிரியமுடன் பாடுதற்குத் தமிழினாலே
பார்பெருகும் வழிநடைச் சிந்தாகச் சொல்ல
பரமனருள் சித்திவினாயகர் காப்பாமே.

### பாட்டு.

வண்ணத் தினைமாவைத் தெள்ளியே என்ற மெட்டு.

1 வாணிசரஸ்பதி அன்னையே நான்
மலரடி போற்றினே னுன்னையே நாவில்
வந்துதிப்பாய் எந்தன் முன்னையே அங்கே
வரமேதருங் கழுகாசல வடிவேலவ னருளாலையே
வழிநடைச்சிந்தைநான் பாடவே முன்னால்
வந்தவினையகன் றோடவே

2 பகர அரிதான அன்னமே பரங்
குன்றஞ் செல்வோம் வாராய் சொர்ணமே நல்ல
பாவாலி மாநகர் முன்னமே இங்கே
பாராய அன்னதானவிக்கினேஜர் ஆலயந்தோணுது
பக்தியாக ஒன்று கூடியே கந்தன்
பாதமெதரிசனந் தேடியே

3 தென்பரங்குன்றமும் ஏகவே நாமள்
சீருடன் இவ்வழி போகவே

சோட்டு

தெரிகிதே விஸ்தார மாகவே நாமள்
தினமும்அவர் கெதியென்றுமே மனமீதினில் அருள்கொண்டுமே
சீக்கிரம் போகலாம் கூடியே தெரு
வீதிகளும் நல்ல மோடியே

4 சந்தியைத்தானு மறித்துமே பொங்கல்
தான்வைப்பார் நாள்கள் குறித்துமே இந்த
தாயிகாளியை நினைத்துமே ரொம்ப
தயவாகவே மனமீதினில் பயமாகவே சனங்கூடியே
தான்வைப்பார் பொங்கலும் பாரடி காளித்
தாயிடம் நல்வரம் கோரடி

5 விஸ்வகுலத்தோர்கள் வாழ்ந்திடும் தெரு
விஸ்த்தாரம் தன்னை யறிந்திடும் நீ
விரும்பியே என்பின்னால் வந்திடு நல்ல
விரிவாகவே தெருவீதிகள் தெரிகிதேஇந்நகர்மீதினில்
வேலன் கிருபையால் தானுமே வளர்
தேறிச் செழித்திட வேணுமே

6 மங்கையர்கள் ஒரு கோடியே இங்கே
வாகுடனே ஒன்று கூடியே தண்ணீர்
வந்து எடுப்பது மோடியே கிணர்
வகையாகவே தெரிகிதடி தகையாரியே போவோமடி
வந்திடுவாய் மட மங்கையே நானும்
வகையுடன் சொல்லுவேன் இங்கையே

7 ஞாலம்புகழ் தனுஷ் கோடியே செட்டியார்
கடையில் சனங் கூடியே சறக்கு
கலமுடன் வாங்குவார் நாடியே இங்கே
நாமும் அவர்கடை தேடியே சாமிகந்தன் பதம் பாடியே
நாடியே போகலாம் அன்னமே வெகு
மோடியாய்த் தோணுது முன்னமே

8 சந்தனம் கர்ப்பூர வெத்திலே சூடஞ்
சாம்பிராணிபத்தி மணத்திலே விற்பார்
தயவாக நல்ல குணத்திலே இங்கே
தாராளமுடன் தேங்காயை ஏராளமா வாங்கியே
சண்முகநாதனை வேண்டியே தனுஷ்
கோடிசெட்டியார் கடை தாண்டியே

9 பரங்குன்ற நாதனைத் தேடியே இங்கே
பாங்காக நம்மளுங் கூடியே செல்லும்
பாதையிலே என்ன மோடியே முன்னால்
பாராய் இச்சிமரம் தோணுது நேராய் இங்குமே காணுது

பத்தியுள்ள சீனி வெல்லமே தமிழ்
பாடினவன் முத்துச் செல்லமே

## அத்தியையுரித்ததோலை என்ற மெட்டு.

சிந்தை மகிழ் வாகவேநான் கந்தசாமி மீதில் மிக
சிந்துதமிழ் தன்னையுமே பாடவே முன்னால்
வந்தவினை நோய்களெல்லாம் ஓடவே அங்கே
தென்பரங்குன்றினில்வாழ்ந்திடுவேலனை நம்பியேநாமளுங் கும்பிடவே [நல்ல
சீக்கிரம் போய்வருவோம் கூடியே வடக்கே
தெரிகிது பாரிது நல் மோடியே 1

அந்தரத்தேவர்கள் போற்றும் கந்தனை பணிவதற்கு இந்த
வழிபோம் பொழுது பாரடி மடம்
விந்தையாகத் தோணுதுபார் நேரடி இங்கே
அன்னமே கேளிதோ இன்னகரில்வாழும் மன்னர்கள்எல்லோரும் நன் [னய மாகவே
அமைத்த சித்திரமடம் இங்கையே ரொம்ப
அழகமாய்த் தோணுதுபார் மங்கையே 2

பக்தியுள்ள மாமயிலே உத்தமியே என்பின வாராய்
சித்திவினாயகர் கோவில் தெரிகிதே பின்னால்
பத்தியாய் சனங்களுமே வருகுதே அங்கே
சீருடனேநாமும்ஆறுமுகந்தனை கோரியேவருவதைகேளிளையேபாராய்
சென்றிடுவோநாமள் அங்கையே ஒன்று
தெரிகிதே பாரிதுநல் இங்கையே. 3

கன்னியே இதிலேவாழும் புண்ணியரெல்லோருங் கூடி
கட்டியிருக்குங் கண்ணுப்பாலம் ஆகுமே தண்ணீர்
அட்டியில்லாமல் உள்ளே போகுமே இதை
கண்டுமே நாமளுநின்று திரும்பியே சென்றிடுவோம் பறங்குன்றமு [மேகிட
காரிளையே என்பின்னால் வந்திடு கிழக்கே
காண்பது தன்னையு நீ யறிந்திடு 4

பக்தியுள்ள பாவாலியை உத்தமியே காக்கு கின்ற
சித்தமுள்ள மொட்டயனை பாரடி ஞான
நிஷ்டையில் இருப்பதென்ன சீரடி இங்கே
பங்கமில்லாமலேவருகின்றபேய்களை அங்கப்பதறஅடித்து விரட்டியே
பாவாலி தன்னையுந்தான் காத்துமே இந்த
பாதையில் தானிருக்கார் பார்த்துமே 5

சித்தமுள்ள மொட்டையின் சத்தியே பணிவதற்கு
உத்தமியே பேரம்பேழுது காணுதே தெற்கே
பத்தியுள்ள காளிகோவில் தோணுதே நல்ல
சிங்காரமாகவே இங்கேஇருக்கிறுள் மங்கையிவள் தன்பங்கமில்லாமலே
சென்று பணிந்திடுவோம் கூடியே நாமள்
இன்று அவள்பதத்தை நாடியே 6

மாயனுக்குபின்பிறந்த மங்கைகாளிகோவில் முன்னே
மகரகண்டாமணியின் ஓசை சத்தமே அண்ட
சிகரங்களை முட்டுதுபார் நித்தமே எந்தன்
அன்னமேகேளிதோ இன்னமுஞ் சொல்லுறேன் நன்னயமாகவே என்
பின்னே வந்திடு
அன்புடனே வடக்கே பாரம்மா அங்கே
ஆறுதெரிவதென்ன சீரம்மா 7

ஆத்துக்கு அக்கரை தன்னில் அங்கிருக்கும் பச்சைக் காளை
அன்புடனே இங்கிருந்து போற்றியே நாமள்
தென்புடன் மலரை அள்ளி சாற்றியே அந்த
அச்சமில்லாதொருபச்சையைத்தானுமே இச்சையாய்எல்லோரும்
மிச்சமாய் பணிகுவார்
அன்புடன் என்பின்னால் வந்திடு இந்த
பெருமைதன்னையுமே நீ யறிந்திடு 8

மங்கையே தீர்வைதன்னை வாங்கிடுங்கச்சேரி இதோ
வச்சிரக்கட்டுகளுடன் தோணுதே வெகு
மெச்சிதமுடனே இங்கே காணுதே இதில்
வந்துமேஎல்லோரும் தந்துமேதீர்வை இந்தவழிதனில் சுந்தரமாகவே
வாகுடன் போவதென்ன சீரடி நாமள்
ஏகும்வழியிலிதைப் பாரடி 9

ஆயன்பெருமாளினுட ஆலயம் ஒன்றிங்கேயே தான்
அன்புடனே பாரிதனில் இன்பமும் முன்னால்
ஆகாயத்தை முட்டுதுபார் கம்பமும் முந்தி
ஆதியிலே அந்தராவணன்தன்னையு நீதமுடனே சங்காரமுஞ் செய்
திட்ட
அரிராமர் என்பவரைத் தானுமே நாமள்
பெருமையுடன்பணிய வேணுமே 10

சித்தமுள்ள மாமயிலே உத்தமியே என்பின் வாராய்
முத்தாலம்மன் சாவடியை பாரம்மா வெகு
விஸ்தாரமாக இருக்கு சீரம்மா நாமள்
சிந்தைமகிழுடன் இந்தவழிதனில்சந்ததமாகவேசென்றிடலாமடி.

தெள்ளுமயிலே நாமள் கூடியே அந்த
வள்ளிமாளையுந் தேடியே 11
வாகுடனே இவ்வழியில் ஏகிடும் பொழுதில் தெற்கே
வாலகுருநாதன் கோவில் அங்கேயே ஆவார்
ஆலயமுந் தோணுதுபார் மங்கையே இந்த
மங்களஞ்சேர்கின்ற பாவிதன்னிலே எங்கும்புகழ்பெற்ற குருநாதன்
தன்னடி
வஞ்சகமில்லாமலே பணிந்திடுவ இவரை
நெஞ்சிலனுதினமு நினைந்திடு 12
மென்னமே பணிவதின்று சொன்னேன் உனக்கு அன்று
மொட்டயசாமி ஆலயந் தோணுது இங்கே
இஷ்டமுடனே இங்கு காணுது இவரை
முக்தியேநாமளு வந்துபணிந்துமே சிந்தைதனில் முட்டனிந்த வழிதனில்
முருகக்கடவுள் தன்னை தேடியே நல்ல
கிரகத்துடன் நடப்போம் கூடியே 13
சுப்பிரமண்யர் கோவிலடி தோணுதே இதிவு மோடி
தொல்லுலகில் கண்டதில்லை பாடி இந்த
புள்ளிமயில் வாகனமுஞ் சீரடி தேவர்
சுந்தரனருளிய கந்தனை நாமளுஞ் சிந்தையில் நினைந்துமே இந்த வழி
தனில்
சுப்பையா தன்னையுமே தேடியே நாமள்
இப்ப நடந்திடுவோம் கூடியே 14
கண்ணூளர் குலத்தில் மேலும் என்னாளும் புகழ்த்தே வருமும்
மன்னன் முத்துச் செல்லந்தமிழ் பாடியே வேறு
வின்னமில்லாமலே ஒன்றாய்க் கூடியே அந்த
கந்தனை நாமளுஞ் சிந்தையில் வேண்டியே கவுசமாகதிதனை ஈழிசமாய்
தாண்டியே
காரணமாய் நடப்போம் அன்னமே புரி
பூரணமாய் வருவாய் சொர்ணமே 15

## தெள்ளுதமிழுக்குதவு சீலன் என்ற மெட்டு.

ஆத்தையுந்தாண்டினமிதோ மயிலே நாமள்
அன்புடனடந்திடுவோம் குயிலே அந்த
ஆனதொரு சரணி முனியாரஞ்செய்த ஊரணியைப்
பாரு என்ன சீரு 1
சுப்பிரமண்யர் அம்[illegible]போடு இந்த
தென்னுலகில் க[illegible]டதில்லை ஏழுடிடமே எந்தன்
தோகையேயினிமங்கள் ஏகமாயிருப்பதின்னு
[illegible] வெகு சேரு 2

பக்தியுள்ள எந்தன்மட மானே இந்த
பாதைவழி போம்பொழுது தானே பொட்டல்
பார்க்குடக்தெரிகிறதோ தீங்கில்லாமலே நடந்து
வருவாய் நீயும் விரைவாய் 3

எத்திசை புகழும் மட மானே நல்ல
ஏகாலிகள் வந்து இங்கே தானே வெளுக்கும்
இன்பமுள்ள ஓடையிது தென்புடன் தெரிகுதடி
மயிலே வர்ணக் குயிலே 4

சுத்தமுள்ள மாமயிலே கூடி நம்ம
சோமசுந்தரத் துரையைத் தேடி இந்த
தொல்லுலகை ஆண்டிருந்த நல்லவரிருக்குமிடம்
பாரு என்ன ஜோரு 5

முத்துநகை எந்தன்மட மானே இந்த
முத்துச்செல்லஞ் செந்தமிழைத் தானே நாமள்
மோடியாக வேபடித்து கூடிநாமள் போய்வருவோம்
மாதே ஙேசளிப் போதே 6

## வட்டமான முகில் மங்கையாளே என்ற மெட்டு

சிந்தையாய் மகிழ்ந்து கந்தசாமியிடம் செல்லுவோம்
தமிழ் சொல்லுவோம்
நாமள் விள்ளுவோம் சீக்கி
ரத்துடன் நடந்து என்பின் வாராய்
மங்கையே பசுஞ் செங்கையே 1

மங்கையே புகழும் மதுரைமாநகரில் வாழ்ந்திடுங்
கலி தீர்ந்திடுங்
கல்வி தேர்ந்திடும் அந்த
மாதுமீனாக்ஷியின் பேறு பெற்றபுரம்
இங்கையே பாரு மங்கையே 2

கன்னியே இதிலேவாழுங் காளித்தாயைத் தேடியே
நாமள் கூடியே
தமிழ் பாடியே கார
ணத்துடன் பணிந்து சென்றிடுவோம்
அன்னமே நாமள் முன்னமே 3

தேவியே இவ்வூரில் வாழும் புண்ணியர்கள் கூடியே
பணந் தேடியே
நல்ல மோடியே வெகு
சித்திரமுடனே விசித்திரமடமுங்
கட்டினார் வேம்பு நட்டினார் 4

கட்டழகி எந்தன்மானே நீ வருவாய் அன்னமே
நாமள் முன்னமே

பாராய் சொர்ணமே இந்த
கருத்த ஊரணியின் பெருத்த ஆலமரம்
இங்கையே பாரு முன்கையே 5
பக்தியாக இந்த பாவாலி எல்லையைத் தாண்டியே
அந்த ஆண்டியே
நாமள் வேண்டியே போயி
பாங்குடன் பணிந்து சோங்குடன் வரலாம்
அன்னமே வாராய் முன்னமே 6
சீக்கிரத்துடன் நடந்து போம் பொழுது காணுதே
இங்கே தோணுதே
மணம் பூணுதே இந்த
சின்னாண்டி ஊரணி தன்னையுந் தாண்டியே
செல்லுவோம் தமிழ் சொல்லுவோம் 7
பாலன் முத்துச் செல்லஞ் செந்தமிழை நாமள் பாடியே
குன்றம் தேடியே
ஒன்று கூடியே காட்டு
பாதைவிட்டு ரோட்டு மார்க்கமாகச் செல்வோம்
அன்னமே பசுஞ் சொர்ணமே 8

## தாவடந்தந் தென்னே விடடி என்ற மெட்டு

1 பக்தியாகச் செல்லுவோம் நாடி
நாமளுங் கூடி
பாலசுப்ரமண்யனைத் தேடி இங்கே
பாங்குடன் செல்லும் பாதை தன்னிலே
தீங்கில்லா ரெட்டியபட்டி யின்னிலே
பச்சமுடன் வாழும் ரெட்டிய ரெல்லோருங் கூடி
இச்சையாய் மடமும் கட்டினர்

2 தருமமு நடத்துவார் மானே
நானுஞ் சொன் னேனே
தாகமது தீர்க்கலாந் தேனே பின்பு
தானெழுந்துமே சாலையின்வழி
பாலசுப்பிர மண்யனைத் தேடி
சந்ததமுட நடப்போமே கந்தசாமியின்
சிந்தையும் சொல்லிப் படிப்போமே

3 சித்தமுள்ள மாமயில் வாராய்
இதென்ன சீராய்
சின்ன உசிலம்பட்டியை பாராய் இங்கே
தேவியே இதில் வாழும் புண்ணியர்
யாவரும்ஒன்றாய்க் கூடிக் கட்டின
சித்திரமடமும் பாராய் இதிலே
தர்மம் நித்தமு நடத்துவாரடி

4 கள்ளிக்குடி சத்திரம் காணுதே
மிகத் தோணுதே
கருத்துடனே செல்லுவோ மாதே கடை
களில் அனுதினமும் இங்கையே
வடைகள் தோசை விற்பார் மங்கையே
காரணமாக நடந்தோமே சிவ்ரகோட்டை
ஊரையுமிகக் கடந்தோமே
5 முக்குச்சாலை தானும் இங்கையே
பாராய் மங்கையே
மோடியாய் கடந்தோம் அங்கையே
முன்னமே ஆத்துப்பாலம் தாண்டியே
கண்ணன் மருமகனையும் வேண்டியே
முக்கியமாய் செல்லுவோம் பெண்ணே கருப்ப
நாயக்கர் விக்கினேஜர் ஆலயமுன்னே
6 முருகக்கடவுள் தனைத் தேடி
நாமளுங் கூடி
முத்துச்செல்லஞ் செந்தமிழ் பாடி
முன்னே திருமங்கலந் தெரிகிது
நன்னயமுடனிங்கு காணுது
முத்துநகையாளே நீ பாராய் கடைத்
தெருவின் சித்திரத்தைச் சொல்லுவேன் சீராய்

## நொண்டிச் சிந்து.

மங்கையே நீ வருவாய் திருமங்கலம்
வளத்தைத் தெரிந்தமட்டும் உரைத்திடுவேன்
எங்கும் கியாதிபெற இந்நகரில்
வியாபாரங்கள் விற்கின்ற கடைத்தெருவும்
வண்டிப்பேட்டை தனைக்கடந்து நாமள்
வாகுடன் செல்லும் வழியில் பாரடி பெண்ணே
கச்சேரியுந் தோணுதிதோ பாராய் அதற்கடுத்த
காரணமாய் பூச்சிநாடார் நந்தவனமும்
மத்திசத்தில் பங்களாக்களும் வாகுடன்
கடந்து நாமள் ஏகிடுவோமே
சுப்பனூரு தன்னையும் விட்டு கூத்தியாகுண்டு
கண்மாயுங் கடந்தோ மிந்தச் சாலைதனிலே
இலங்கையை அழித்ததொரு ராமசாமி
இன்பமுள்ள தூதரிந்த ஆஞ்சநேயராம்
வாய்வுராஜனின்குமாரனும் அஞ்சனாதேவி
வரப்பிரசாதத்தினால் பெற்ற மைந்தர்கள்
கூட்டங் கூட்டமாயிருப்பதை பார்த்திடு நீ
கோலமுள்ள மாமயிலே அன்னமே நீ கேளாய்
பரங்குன்றந் தெரிகிதிதோ இந்த

பாலசுப்பிரமணியருட ஆலயங்கண்டோம்
பணிந்திடுவாய் மயிலே அந்த
பாலன் முத்துச் செல்லந்தமிழ் பாடினமிதோ
தனததோம் தனதினனே தான

## பாதிராத்திரி வேளையில் என்ற மெட்டு.

தென்பரங்குன்றில் வாழ்ந்திடுங்கந்தா
தேசிகாவடி வேலா எந்தன்
செந்தமிழ்க்கனு கூலா துதி
செய்குவேனருள் சீலா நீயும்
சித்தம் வைத்தென்னை காத்தருள்
சிவ சுப்பிரமண்ய லோலா 1

சரவணப் பொய்கைதான் தெரிகிதே
தையலே இங்கு நாடி ஒன்ருய்
ஸ்நானஞ்செய்து நீ ராடி நாமள்
சல்தியாகவே தேடி இந்த
சண்முகவடி வேலவனைப் போயி
தான்பணிகுவவ கூடி 2

கீழ்புறமாக சென்றுமேகிரி
சுத்துவோ நாமள் நேராய் இந்த
கீர்த்தியை கண்ணுல் பாராய் நல்ல
கிருமமாகவே சீராய் எந்தன்
கிட்டவே நீயும் அட்டியில்லாமலே
இஷ்டமாகவே வாராய் 3

தெற்குப் பாதையில் செல்லுவோம் பெண்ணே
தென் பரங்குன்றந் தேனே இங்கு
தெரிகிது மட மானே நாமள்
சீக்கிரத்துடன் தானே இந்த
செந்தமிழ்க் கருள் தந்திடும் வள்ளி
தேவியாளே தெய்வ யானை 4

காரணமாக ஒன்றுகூடியே
காவடி வருங் கோடி இங்கு
கந்த நாதனைத் தேடி நாமள்
கருத்துடன் செல்லுவோங் கூடி தமு
காசலன் மீதுதானியற்றிய
காவடிச் சிந்தைப் பாடி 5

சூரனையே சம்மாரஞ் செய்திட்ட
சுப்பிரமண்யனே வாரும் உன்னை
தோத்திரஞ் செய்தேன் பாரும் சோம
சுந்தரமைந்தா காரும் நான்
சொல்லிடுந்தமிழ் இவ்வுலகில்
துலக்கிட அருள் தாரும் 6

சன்னதி கோபுரந்தன்னில் வாழும்
சங்கிலிமுனி யாண்டி உந்தன்
தாளிணை தன்னை வேண்டி பணிந்து
சல்தியாகவே தாண்டி கந்த
சாமியே உந்தன்பாதம் போற்றினேன்
சண்முகாமலே யாண்டி 7

பக்தியாகப் பணிந்தேனே கண்ணால்
பார்த்திடுங் குண சிலா பரங்
குன்றில் வாழும் லோலா நல்ல
பார்வதி அருள் பாலா உந்தன்
பாதமே கெதியாய் நினைந்தேனே
பாதுகார்த்திடும் வேலா 8

சேயிளையாளே அன்னமே இந்த
செந்திவேலனைப் போற்றி முல்லை
சிவந்தி பிச்சிகள் தூற்றி பன்னீர்
செண்டுகள் அள்ளிச் சாற்றி நீயும்
சீக்கிரத்துடன் வந்திடு முன்னால்
தெரிகிது ரெம்ப நேர்த்தி 9

ரயில்வேஸ்டேஷன் தான் தெரிகிறது
நங்கையே முன்னால் தானே நீயும்
நடந்து வா பசுந் தேனே நாமள்
நலமுடன் செல்வோ மானே அங்கே
நாடியேபோயி டிக்கட்டு தன்னை
நானும் வாங்கி வா பேனே 10

பாலனுமுத்துச் செல்லஞ் செந்தமிழ்
பாங்குடனே பாடி நாமள்
பாவாவி மாநகர் தேடி பக்கம்
பார்த்திடாமலே நீ வாடி ரயில்
பாசாகு முன்னே நாமளு மேறியே
போகலாம் ஒன்று கூடி.

### பகர அரிதான பெண்ணே என்ற மெட்டு.

மங்கையே வாராயென் கண்ணே ரயில்
மார்க்கமாய்ச் செல்லுவோம் பெண்ணே
1 தென்பரங்குன்றத்தின் ஸ்டேஷனை விட்டுமே
செல்லுதுபார் மெயில் மானே இந்த
கம்பர்கள் வாழ்கின்ற கப்பலூர் தன்னை
கடந்ததிங்கே பசுந் தேனே நாமள்
நம்பியே வேலன் தமிழிசை பாட
ரயில் ரெம்ப வேகமாய் தானே முன்னால்
நாட்டில் புகழ்பெற்ற திருமங்கலஸ்டேஜன்
நங்கையே பாரிதோ இங்கேயே தோணுது மங்கை

2 திருமங்கலமென்னும் ஸ்டேஷனைத்தாண்டுதே
சேயிலேயே கண்ணால் பாரு இங்கு
சிங்காரமாகவே செப்பிடுவாரிந்த
சிவரகோட்டையெனனும் ஊரு நல்ல
மங்களஞ் சேர்கின்ற கள்ளிக்குடி இதோ
வாகுடன் தோணுது நேரு வந்தி
டுவாயெந்தன் சிந்தை மகிழுடனவாகாகவே
தாண்டி ஏகிடுதே வண்டி மங்கை

3 கொக்கலஞ்சேரியென்னும் ஸ்டேஷனை தாண்டிதோ
கோலமுள்ள ரயில்வண்டி செப்ப
முக்கியமதாகவே முன்னிஞ்சின் தன்னிலே
மோகமுடன் புகை மண்டி நல்ல
எக்காலமுமகியாதி பெற்ற விருதுநகர்
ஜங்ஷன் தன்னை அண்டி இங்கே
இன்பமதாகவே நிற்கிது பாரிதோ ஏலக்குயிலே
அன்னமே சோலைக்கிளியே முன்னமே மங்கை

4 பய்யஇறங்கி நீ வந்திடுவாய் எந்தன்
பத்தினியே மட மானே நீயும்
செய்கைகளாகவே ஸ்டேஷன் மாஸ்டரிடம்
டிக்கட்டை தந்திடு தேனே நல்ல
வையம் புகழும் விருதுநகரில் வளத்தை
சொல்லுகிறேன் நானே இங்கு
வந்திடுவாய் எந்தன் சிந்தை மகிழுடன்
மானே அடிதேனே இனிநானேசெல்லுவேனே மங்கை

5 மங்களஞ் சேர்கின்ற பாவாலியாஞ் ஜமீன்
மாநகரில் எந்தநாளும நல்ல
திங்கள் மும்மாரிபொழிந்து செழிப்புடன்
செல்வம் பெருகியே வாழும் இந்த
செங்கைவடி வேலன்பாதம் பணியுமுத்துச்
செல்லந்தமிழிசை கேளும் நீயும்
அங்கங்குளிந்துநடந்துவா பெண்ணே
அனனமே கேளிதோ இன்னமுஞ் சொல்லுறேன் மங்கை

## அத்திமுகர்க்கிளைய சாமி என்ற மெட்டு.

விருதுநகர் வளத்தை தானே
இங்கு நானே
செல்லு வேனே நீயும்
விரைவில் நடந்து வாராய் தேனே நல்ல
வெய்யில்வருமுன்னமேதான் தையலே நடந்திடுவோம்
மாதே கேளிப் போதே 1

தெற்குமுகமாகவே நாடி
தமிழ் பாடி
நாமள் சோடி யாகச்
சென்றிடலாம் இந்தவழி கூடி முன்னால்
தெரிகிதடி பருத்திவிலே வைத்து வாங்குகின்ற
மாலே பார் முன்னாலே 2

ரெங்கநாதர் ஆலயந்தான் பெண்ணே
நானுஞ் சொன்னே
வாராய் முன்னே நாமள்
நேர்த்தியாய் பணிந்திடலாங் கண்ணே நீயும்
நெத்தியில் திருநீறணிந்து பத்தியாய் எந்தன் பின்னால்
வாரும் கலி தீரும் 3

முனிஸ்பாலின் ஆஸ்ப்பத்திரி இதே
பாரு மாதே
தெரி கிதே நீயும்
முன்னமே நடந்திடுவாய் மாதே இங்கே
மோட்டாரு சயிக்கள்வண்டி நாட்டமுடன் ஓடும்வழி
பாரு என்ன சீரு 4

மாரியம்மன் ஆலயத்துள் தானே
வாராய் மானே
நான் சொன் னேனே வரம்
வாங்கியே வெண்ணீறணிவாய் தேனே நாடார்கள்
மகிமைபண்டாலமைத்து வைத்ததொரு சித்திரம்பா
ரணங்கே நீயும் வணங்கே 5

ராமனும் லட்சுமணனுஞ் சீதை
கோவில் மீதே
தெரி கிதே இங்கே
நாடியே நீ பார்த்திடுவாய் இதை பக்கத்தில்
ராவணன் இந்திரசித்து அதிகாயன் கும்பகர்ணன்
நாட்டம் அரக்கர் கூட்டம் 6

அனுமானும் சாம்புவந்த மூர்த்தி
இங்கே பார்த்தி
வெகு நேர்த்தி இந்த
ஆலயத்தின் மேலே ஏன்தான் கீர்த்தி யாக
அன்னமேகேளா சுக்கிரீவன் நன்னயமாய் மாலியவான்
பதுமை என்ன புதுமை 7

இந்து நாடார் சொந்த மகிமை பண்டு
விருந்து கொண்டு
பணத்தை இன்று நல்ல

ஏராளமாய் சிலவு செய்தா ரன்று இதற்கு
ஏஜண்டு தெ. சின்னப்ப நாடாரின் முயற்சிகளி
ஞலே நடந்த வேலே 8

மேலவாசல் தான் கடந்தோ மிங்கே
எந்தன் மங்கை
வாராய் செங்கை ரெம்ப
விஸ்தாரமாய் தோணுதுபார் இங்கே நல்ல
வேலாயுதத் தேவர்முன்னுல் தானமைத்த விக்கினேசர்
பாதம் பணிவாய் நீதம் 9

பாலன்முத்துச் செல்லந்தமிழ் பாடி
இன்று நாடி
ஒன்று கூடி இந்த
பாவாலிமாநகரமதைத் தேடி செல்லும்
பாதையில் பாராய்மயிலேகியாதியுடன்தோணுதிங்கே
சொன்னேன் நாமள் முன்னே 10

## கும்மி.

மானே எந்தன் பின்னே நீ தொடர்ந்து வாராய்
மங்களஞ்சேர் விருதூர் வளத்தில்
ஞானம்அன்சன்ஸ் பட்டணம் பொடிக்கடை
நன்மையாய்த் தோணுது பார்மயிலே 1

காரம் மணம் குணம் வாடைகளுக்கருங்
காட்டமுள்ள பொடி தன்னையுமே
வீதியமாக சனங்களும் வாங்கியே
வீரியில் செல்கின்ற பாவனே பார் 2

சுப்ரமண்யரின் ஆலயத்துள்வலம்
சுத்தியே நாமள் மிகப்பணிந்தோம்
பத்தியாய் மாரி வெயிலுவந்தாளிங்கு
பாங்காக ஏறு ரதம்பாராய் 3

சத்திரியவித்தியா சாலே தன்னேவிட்டு
தாண்டியே நாமளும் இப்போது
முத்திதருகிற கருப்பண சாமியின்
முன்னமே நாமள் மிகப்பணிந்தோம் 4

அன்னமே பாரிதோ வெயிலுவந்தீஸ்பரி
ஆலயத்துள்வலம் சுத்தியேதான்
நன்னயமாகப் பணிந்துமே நாமளும்
நாடியே போகலாம் நீ வருவாய். 5

முல்லேநகருரை மன்ன னரண்மனே
முன்னேயே தோணுது பார்மயிலே

149895

சொர்ணமயமுடன் காணுது இங்கையே
சத்தமுள்ளமட மங்கையேதான். 6

மகமதியர் இங்கு வந்து தொழும்
பள்ளி வாசலது ரெம்ப நேசமுடன்
இஸ்லாமானவர் வந்து படித்திடும்
இன்பமுள்ள ஸ்கூல் தனையும் பார். 7

வேலன் கிருபையினாலேயே நாமளும்
விருதுங்கர் தன்னைத் தான்கடந்து
பாலன்முத்துச் செல்லஞ் செந்தமிழ் பாடியே
பாங்காசச் செல்வோம் இப்பாதைவழி. 8

## இசைந்த சூலங்கரியுரி என்ற மெட்டு.

நாமளும் ஒன்றாய்க்கூடி இவ்வழிதன்னில் நடந்தோமே
இங்கு நலமுடன் ரெட்டியபட்டி ஓடையைக் கடந்தோமே
சேமமுடன் கவுசமாநதி யென்று சொல்லிடு ஆறு
முன்னால் தெரிகிதோபார் தேவமார் நந்தவனமிதோவெகு சீரு
அய்யனார் பாதம் பணிந்துமேநாமள் இவ்வழி கூடி
நல்லஅமுசம் பொருந்திய கருப்பநாடார் ஊரணிதனைத் தேடி
தாகந்தெளிந்தோநாமள் சங்கஞ்செடி ஓடையைப் பாராய்
முன்னால் தழுத்து நிழலதுகொடுக்கு உடமரம் வெகு சீராய்
கன்னிமார் ஆலயந் தெரிகிதுபாரிதோ மட மானே
இந்தக் காசினியோர்புகழ் பாவாலி நகரில் தானே
சாமிதெரிசனம் செய்து திரும்பியே வந்தோமே
நாமள்தயவுடனே இருவர் நமது ஊருவந்து சேர்ந்தோமே
பண்ணியபாவம் போக்கிட கெங்கையில் நீராடி
பராசத்தியின் கன்னிமார்தனை பணிந்து இவ்வழி கூடி
ஆனைமுகத்தோன் ஆலயந்தோணுது நீ பாரு
இங்கே அன்புடன்நாமள் பதிதனில் வந்தமர்ந்தோம் சீரு

கானகந்தனில் வேடனைச்சென்ற ஆறுமுகன் வாழி
இந்தக்காரிகை வள்ளி தெய்வானை யீஸ்பரி வாழி
மாதமும் மாரிபொழிந்து இந்நகர் செழித்திட வாழி
இந்த மா. ச. தனுஷ்கோடி செட்டியார் வாழி
நீதமுடன் தமிழ்படிப்போர் கேட்போர்களும் வாழி
இங்கே நித்தியமும் ஆறுமுகந்தனை துதித்திடுவோர் வாழி

(முற்றிற்று.)

உ

## எதிர்பாருங்கள்! எதிர்பாருங்கள்!

இருக்கங்குடி மாரியம்மன் பேரில் வழிநடைச் சிந்து தயாராகி வருகிறது கூடிய சீக்கிரம் வெளிவரும் தேவையுள்ளவர்கள் பாவாலி மா.ச.தனுஷ்கோடிசெட்டியார் கடையில், திருப்பரங்குன்றம் வழிநடைச் சிந்து மொத்தமாயும் சில்லரையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

M. S. தனுஷ்கோடி செட்டியார்,
பலசரக்கு கடை, பாவாலி ஜமீன்.

30
12-80